

வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சேண்பாக்கம் 31வதுவார்டில் புதியரேசன் கடையை கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். அருகில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, ஆட்சியர் குமரவேல் பாண்டியன், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன்எம்.எல்.ஏ, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், பகுதி செயலாளர் பி.முருகபெருமாள் மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டு மருத்துவ மாணவர் ராஞ்சியில் இறந்தது தொடர்பாக

# உரிய விசாரணையை விரைந்து மேற்கொள்வீர்!

## ஜார்கண்ட் மாநில முதலமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, நவ.5-

தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவ மாணவர் ம.மதன்குமார் என்பவர் ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் இறந்ததற்கு உரிய விசாரணை மேற்கொள்ள வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். மேலும் உயிரிழந்த மதன்குமாரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் மூன்று இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிப்பதாக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் வேலகவுண்டம்பட்டி அருகே உள்ள புத்தூரைச் சேர்ந்த மதியழகன் என்பவரது மகன் ம.மதன்குமார் (வயது 28) ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியில் உள்ள இராஜேந்திரா மருத்துவக் கல்லூரியின் (Rajendra Institute of Medical Sciences) விடுதியில் தங்கி இரண்டாம் ஆண்டு தடயவியல் மருத்துவம் படித்து வந்த நிலையில், ம.மதன்குமார் காணாமல் போய் பின்னர் அவரது உடல் எரிந்த நிலையில் சடலமாக அவர் தங்கியிருந்த விடுதியின் பின்புறத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த மனவேதனையடைந்தேன்.

உடனடியாக தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்கள் ஜார்க்கண்ட மாநில அரசுடன் தொடர்பு கொண்டு ம.மதன்குமாரின் உடலை அவரது சொந்த ஊருக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை விரைந்து மேற்கொண்டதன் அடிப்படையில், அவரது உடல் விமானம் மூலம் கொண்டு வரப்பட்டு, அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டு, வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரால் அஞ்சலி செலுத்தப்பட்டு, நேற்று காலையில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

மேலும், ம.மதன்குமார் மர்மான முறையில் இறந்த சம்பவம் குறித்து ஜார்க்கண்ட் மாநில காவல் துறையினரும் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**இறந்தவர் குடும்பத்துக்கு ரூ.3 லட்சம் நிதி உதவி**

இந்த துயரமான சூழ்நிலையில், ம.மதன்குமாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் அவரது உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் குடும்பத்தாருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், ம.மதன்குமார் அவர்கள் இறந்தது குறித்து உரிய விசாரணையை விரைந்து மேற்கொண்டு, அவரது இறப்பிற்கு நீதி கிடைக்கும் வகையில் துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் நான் கடிதம் மூலம் ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களை வலியுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




மாண்புமிகு ஆ.இராசா அவர்கள்
எழுதிய நூல் - ஆய்வரங்கம்

நாள்: நவம்பர் 5, மாலை 5.30 மணி
இடம்: தேவநேயப் பாவாணர் அரங்கம், அண்ணா சாலை, சென்னை.

நூல் ஆய்வுரை

திரு.எஸ்.பீட்டர் அல்போன்ஸ்
தலைவர், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம்

திரு.சுப.வீரபாண்டியன்
தலைவர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

திரு.க.கனகராஜ்
மாநில செயற்குழு உறுப்பினர், சி.பி.ஐ.(எம்)

திரு.ஆளூர் ஷாநவாஸ், M.L.A.
மாநில துணைப்பொதுச் செயலாளர், விசிக

திரு.மு.வீரபாண்டியன்
மாநில துணைச் செயலாளர், சி.பி.ஐ.

திரு.சே.மெ.மதிவதனி
துணைப் பொதுச் செயலாளர், தி.க.

அனைவரும் வருக!




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு நேற்று (04.11.2023) பெருநகர சென்னை மாநகராட்சி திரு.வி.க.நகர் மண்டலம் டிமலஸ் சாலையில் உள்ள கால்வாயில் நீர் வெளியேற்றும் நிலையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், மத்திய வட்டார துணை ஆணையர்கே.ஜே.பிரவீன் குமார், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.




நீட் தேர்வு சட்டமாக இயற்றப்படுவதற்கு முன்பே அதை இந்திய ஒன்றியத்தில் முதன் முதலாக எதிர்த்தவர் நம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களுடைய திருவாரூர் மண்ணில், ஆண்டிப்பந்தல் பகுதியில் நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் உள்ளனர்.



திருவாரூர் மாவட்டம், குடவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜோதிராமனின் மகன் மருத்துவர் சூரியநாராயணன் – மருத்துவர் பவித்ரா இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி வடமட்டம் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கழக இளைஞரணிச் செயலாளரும் – இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்டச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., நாகை கௌதமன், நிவேதா முருகன் எம்.எல்.ஏ., மணமக்களின் உறவினர்கள் கழக முன்னணியினர் உடன் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (03.11.2023) சென்னை தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தலைமையில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2023 – 2024 ஆம் ஆண்டு அறிவித்த திட்டமான ரூ. 1000 கோடி மதிப்பீட்டில் “வடசென்னை வளர்ச்சித் திட்டம்” குறித்து சம்பந்தப்பட்ட துறை அரசு செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, உள், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வைத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, பெருநகர சென்னை காவல் கூடுதல் ஆணையர்கள் (போக்குவரத்து) ர.சுதாகர், (வடக்கு) ஆஸ்ரா கர்க் மற்றும் உயர் அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.